**புதுச்சேரி அரசு**
**கலை, பண்பாட்டுத் துறை**

**எண்,4450 /கபது/தி4/பு.க/2025** **புதுச்சேரி, நாள்: 07-01-2025**

# செய்திக் குறிப்பு

புதுச்சேரி அரசு, கலை, பண்பாட்டுத்துறையானது சிறுவர்கள் மற்றும் நூலக வாசகர்களுக்காக பல்வேறு காலகட்டங்களில் புத்தகக் கண்காட்சிகளை நடத்திவந்துள்ளது. அதேபோன்று இந்த ஆண்டு **"குழந்தைகள் புத்தகம் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் கண்காட்சி – 2025" (Kids Book and Toys Fair – 2025)** என்ற தலைப்பிலான புத்தகக் கண்காட்சியினை எதிர்வரும் **20-01-2025 முதல் 26-01-2025** வரை **புதுச்சேரி, கருவடிக்குப்பம், காமராஜர் மணிமண்டப வளாகத்தில்** நடத்தவுள்ளது. இக்கண்காட்சியில் பங்கேற்க உள்ளூர் மற்றும் வெளியூர் பதிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

ஆதலால் புத்தகப் பதிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்து **13-01-2025** ஆம் நாளுக்குள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம்.

**விதிமுறைகள்:**

1. பதிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் கொள்முதல் செய்யப்படும் புத்தகங்கள் மற்றும் விளையாட்டுப்பொருட்களுக்கு குறைந்தபட்ச கழிவு 10 சதவீதம் அளிக்கவேண்டும்
2. புத்தகக் கண்காட்சி குழுவால் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தை மீறி ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது.
3. வாடிக்கையாளர்களுக்கு இன்முகத்துடன் சேவை செய்ய வேண்டும்.
4. ஒவ்வொரு அரங்குக்கும் புத்தகக் கண்காட்சி குழுவால் ஒரு மேஜை மற்றும் இரண்டு நாற்காலிகள் அளிக்கப்படும்.
5. விண்ணப்பங்கள் பெறப்பட்டவுடன் குலுக்கல் முறையில் அரங்குகள் ஒதுக்கப்படும்.
6. ஒரு அரங்குக்கான கட்டணம் ரூபாய். 5,000/- (ரூபாய் ஐயாயிரம் மட்டும்)
7. அரங்குகள் ஒதுக்கீடு மற்றும் அவ்வப்போது எழும் சிக்கல்களுக்கான தீர்வில் புத்தகக் கண்காட்சிக் குழுவின் முடிவே இறுதியானது.
8. அரங்குகளுக்கான விண்ணப்பம் அதிக அளவு வருமாயின் முதலில் பெறப்படும் விண்ணப்பங்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படும்.
9. புத்தகக் கண்காட்சி தொடர்பான விதிகளைத் தேவைக்கேற்ப அவ்வப்போது திருத்தவோ, மாற்றவோ, நீக்கவோ அரசால் நியமிக்கப்பட்ட புத்தகக் கண்காட்சிக் குழுவிற்கு முழு அதிகாரம் உண்டு.
10. விண்ணப்பங்கள் மற்றும் விதிமுறைகளின் நகலைக் கீழ்க்காணும் முகவரியில் நேரிலோ அல்லது **https://art.py.gov.in** எனும் இணையதளத்திலோ பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
11. நிறைவு செய்த விண்ணப்பங்களை **13-01-2025** ஆம் நாளுக்குள் கீழ்க்குறிப்பிட்ட இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இயக்குநர்**
**கலை, பண்பாட்டுத் துறை**
**எண்.1,ரோமன் ரோலண்ட் வீதி**
***புதுச்சேரி 605001***
***0413- 2336203,2349716,***
**தொடர்புக்கு: பா.சம்பந்தம், ஆலோசகர், *9597797878***